## மத்திய நுவரகம்பலாத பிரதேச சபை
## அநுராதபுர மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 21 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 யூன் 09 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை செப்தம்பர் 04 ஆம் திகதியும், தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மத்திய நுவரகம்பலாத பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் கழிவுப் பொருட்களுக்கான சிட்டையிடப்பட்ட வரி வருமானம் ரூபா. 425,200 ஐ ரூபா. 340,300 என கணக்கில் காட்டப்பட்டிருந்ததால் ரூபா. 84,900 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | வருடத்திற்குரிய சிட்டையிடப்பட்ட வருமானத்தை இனங்கண்டு கணக்கிலிடப்பட வேண்டும். | 2019 ஜுன் மாதம் தொடக்கம் ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதால், ஆவணத்தின் படி ஆண்டிற்கான தொகையைக் குறிப்பிடாமல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாளிலிருந்து பெறுமதி குறிப்பிடப்பட்டிருந்தது |
| (ii) | வீதி சீர்திருத்தங்களுக்காக பெறப்பட்டிருந்த ரூபா. 60,000 தொகை பொது வைப்பாக காட்டப்பட்டிருந்தது. | வருடத்திற்குரிய சகல வருமானங்களும் இனங்காணப்பட்டு கணக்கிலிடப்பட வேண்டும். | குருனிக் கற்கள் போக்குவரத்திற்காக பெறப்பட்ட ரூபா. 60,000 தொகை தவறுதலாக பொது வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருப்பதை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | எழுதுகருவிகள் நுகர்விற்கான செலவனம் ரூபா. 513,908 திரண்ட நிதிக்கு சேர்க்கப்பட்டிருந்தது. | வருடத்திற்குரிய வருமானத்தை வருட வருமானத்திற்கு சேர்க்கப்பட்டு காட்டப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்வரும் ஆண்டில் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகிறேன். |
| (iv) | கடந்த 3 ஆண்டுகளுக்கு முன் உழைத்திருந்த வருமானம் ரூபா. 255,035 வைப்புக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது. | முன்னைய வருடங்களின் வருமானம் இனங்காணப்பட்டு நிதிக் கூற்றுக்களில் சரியாக காட்டப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| (v) | இறைச்சிக்கடை வாடகை நிலுவை வருமானம் ரூபா 38,400 ரூபா 50,000 வைப்பிலிருந்து ஈடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் வைப்பில் ஈடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| (vi) | புறநெகும செயற்திட்டத்திற்கு தீர்வு காணப்பட வேண்டிய ரூபா. 2,874,620 நிதிக் கூற்றுக்களில் காட்டப்படவில்லை. | சகல பொறுப்புக்களும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். | புறநெகும செயற்திட்டத்தில் தீர்வு காணப்பட வேண்டி இருந்த வரவு ரூபா. 2,874,628 சரியாக கணக்கிடப்பட நடவடிக்கை எடுக்கப்படும். |
| (vii) | 2018 ஆம் ஆண்டிற்கான பெற்றுக் கொள்ள வேண்டிய முத்திரை வரி வருமானம் ரூபா. 7,362,000 கணக்கில் காட்டப்படவில்லை. | சகல நிலுவை வருமானங்களையும் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

**(இ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் நிதிக்கூற்றுக்களின் படி நிலுவை முத்திரை வரிப் பெறுமதி ரூபா. 24,351,268 ஆக இருந்த போதும் அத் தினத்தில் ஆவணத்தின் படி காட்டப்பட்ட பெறுமதி ரூபா. 15,451,268 ஆக இருந்தமையால் ரூபா. 8,900,000 வித்தியாசம் காணப்பட்டது. | உரிய கணக்குகளில் வித்தியாசத்தை ஒப்பிட்டு கணக்குகளை சீர் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| (ii) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் படி உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியில் கடன் பெறுமதி ரூபா. 2,737,082 ஆக இருந்த போதும் அத்தினத்தில் நிதியத்தில் கணக்கு உறுதிப்படுத்தும் கடிதத்தின் படி ரூபா. 2,237,082 ஆக இருந்தமையால் ரூபா. 500,000 வித்தியாசம் காணப்பட்டது. | உரிய கணக்குகளில் வித்தியாசத்தை ஒப்பிட்டு கணக்குகளை சீர் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதிக் கணக்குகள் சமப்படுத்தும் போது ஏற்பட்ட தவறினால் அங்கு கணக்கு ரூபா. 500,000 குறைவாக காட்டப்பட்டுள்ளதுடன் மீதி உறுதிப்படுத்தும் கடிதத்தில் இருக்கும் ரூபா. 2,237,082 தொகை சரியான பெறுமதியாகும். |

**(ஈ) பெற வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 1,695,097 ஆன 08 கணக்கு மீதிகள் 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வந்தது. | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டின் முடிவுக் கணக்குகள் தயாரிக்கும் போது சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

**(உ) கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 67,769,536 பெறுமதியான 05 கணக்கு விடயங்களுக்கு உரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள பெறுமதிகளை உறுதிப்படுத்து வதற்குத் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 2003 இன் 17 ஆம் இலக்க அரச சேவை சேமலாப நிதியச் சட்டம் | 480,787 | 2019 பெப்ரவரி மாதம் முதல் நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2003 இன் 17 ஆம் இலக்க அரச சேவை சேமலாப நிதியச் சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன் |
| (ஆ) | 203 ஆம் அதிகாரம் மோட்டார் போக்குவரத்து சட்டம் 2.1 ஆம் பிரிவு | | 02 டிராக்டர்கள், 02 டிரேலர்கள் மற்றும் 02 பவுசர்கள் கை டிராக்டர் என்பன வரை பதிவு செய்யப்படாமல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பதிவு செய்யாத வாகனங்களை பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை வரிச் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | 65,675 | சபையினால் அறவிடப்பட்டிருந்த முத்திரைக் கட்டணங்கள் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

## 1.5 போதியளவு அதிகாரத்தால் சரிபார்க்கப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 182 ஆம் பிரிவிற்கு அமைய முறையான அங்கீகாரம் இல்லாமல் சபைக்கு பெறப்பட வேண்டியிருந்த நிலுவை வருமானம் ரூபா. 9,341,094 எழுதப்பட்டிருந்தது. இதனை உறுதிப்படுத்துவதற்கு போதுமான சான்றுகள் முன்வைக்கப்படவில்லை. | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 182 ஆம் பிரிவின் படி முறையான அங்கீகாரத்தின் கீழ் பதிவழிக்கப்பட்டிருக்க வேண்டும். | நிலுவை வருமானம் தொடர்பாக பரிசீலிக்கும் போது முன்னைய ஆண்டுகளிலிருந்து இடம் பெறுகின்ற இப் பெறுமதிகள் கணக்கீட்டு குறைபாடுகள் காரணமாக இடம்பெற்றதாக அடையாளம் காணப்பட்டதனால் அத் தவறுகளை நிவர்த்தி செய்ய மகா சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டதன் பின்னர் இக் கணக்குகள் சீர்செய்யப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,882,652 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,578,175 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் மாதம் புறநெகும செயற்திட்டத்திலிருந்து ரூபா 2,400,000 பணம் பொது செலவின நிதிய கணக்கிற்கு மாற்றப்பட்டு சயின் செலவினம் | புறநெகும செயற்திட்டத்திற்குரிய செயற்பாடுகளுக்கு மாத்திரம் | ஏற்கனவே ரூபா 2,400,000 தொகை புறநெகும செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்டிருந்தது. | செலவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 519,800 | 340,300 | 327,900 | 12,400 | 480,000 | 337,930 | 337,930 | 2,113,950 |
| (ii) | வாடகை | 4,871,313 | 4,806,790 | 4,649,323 | 157,467 | 5,533,525 | 3,771,743 | 3,690,701 | 1,308,382 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 209,550 | 307,300 | 307,300 | - | 1,982,680 | 1,083,408 | 1,083,408 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 50,202,112 | 41,379,499 | 36,153,590 | 5,225,909 | 8,000,000 | 10,286,746 | 5,444,997 | 20,277,231 |
| | மொத்தம் | 55,802,775 | 46,833,889 | 41,438,113 | 5,395,776 | 15,996,205 | 15,479,827 | 10,557,036 | 23,699,563 |

### 2.3.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 134 ஆம் பிரிவின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் முன்னேற்றமடைந்த பிரதேசங்களின் இருந்து வீதவரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | வீதவரி பிறப்பித்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | முன்னேற்றமடைந்த பிரதேசங்களின் பெயர், வரைபடங்கள் மற்றும் எல்லைகள் அட்டவணைகளுடன் உள்ளூராட்சி திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

### 2.3.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பண்டுலகம மாதிரிக் கிராமத்தில் அமைந்துள்ள 10 கடைகளின் 2-6 வருடங்களாக நிலுவையாக | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை உரிமையைக் கூறி எழுத்து பூர்வ அறிவிப்பை வழங்க |

| | | |
|---|---|---|
| இருந்து வருகின்ற ரூபா. 426,127 கடை வாடகை மீதி அறவிடப்படவில்லை. | | தவறிவிட்டதால் இவ்வாறு அறவிடப்படாமல் இருந்தது. இது தொடர்பாக உள்ளுராட்சி திணைக்களத்தின் அறிவுருத்தல்களுக்கு இணங்க பண்டுலகமவில் அமைந்துள்ள கடைகள் மத்திய நுவரகம்பலாத பிரதேச சபைக்கு உரித்தாக்குமாறு அதி மேதகு ஜனாதிபதி அவர்களின் அவதானத்திற்கு விடப்பட்டுள்ளது. |

**2.3.4 நீதிமன்றத் தண்டப்பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,559,333 மற்றும் முத்திரைக்கட்டணம் ரூபா 24,351,268 ஆகும். | முத்திரைக் கட்டணங்கள் நீதிமன்றத் தண்டப்பணத்தை தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முத்திரைக் கட்டணங்கள் நீதமன்றத் தண்டப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களுக்கான பாதைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், மக்களின் நலன், வசதிகள், நலன்புரிகள் உள்ளிட்ட சபை நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டம் 126 பிரிவின் கீழ் 28 பிரதானமான விடயங்களை பிறப்பிக்க வேண்டிய போதும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உபவிதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டும். | உப விதிகள் பிறப்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறியதருகின்றேன். |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையால் நிறைவேற்ற வேண்டிய செயற்பாடு களுக்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும. | 2020 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்துள்ளதாக அறிய தருகின்றேன். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான சபையால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தியை இனங்கண்டு அதன் பிரகாரம் நடவடிக்கைகளை செயற்படுத்த வேண்டும். | 2030 ஆம் ஆண்டின் போது எதிர்பார்த்த நிலைபேறான அபிவிருத்தி இலக்குகுள் மற்றம் இணங்கண்டு சபையால் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. |

3.2 **முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இடம் மாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் ஓய்வு பெற்ற ஊழியர்கள் 07 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 172,682 ஊழியர் கடன் 10 வருடங்களுக்கும் அதிகமாக அறவிடப்படாமல் இருந்தது. | நிலுவைக் கடன் தொகை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரதேச சபையில் சேவையில் ஈடுபட்டிருந்து ஓய்வு பெற்ற மற்றும் இடம் மாற்றம் பெற்றுச் சென்ற ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய சேவைக் கடன் அறவிட தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டிலிருந்து கழிவுப் பொருள் வரி வருமான நிலுவை ரூபா. 1,063,950 அறவிடப்படாமல் இருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந் நிலுவைத் தொகை அறவிடப்பட நியாயமான காரணங்கள் இன்மையால் இந் நிலுவை நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரிய வாராந்த சந்தை வரி வருமானம் ரூபா. 47,465 அறவிடப்படாமல் இருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஈ) | 2015 ஆண்டிற்கு முன்னிருந்து வருகின்ற இறைச்சிக்கடை வரி வருமான நிலுவை ரூபா. 556,520 சபை மூலம் அறவிடப்படாமல் இருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இறைச்சிக்கடை வரி வருமானம் அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.3.1 செயலற்ற / பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா. 10,405,318 பெறுமதியான 13 மோட்டார் வாகனங்கள் 02 தொடக்கம் 05 வருட காலமாக செயலற்ற நிலையில் காணப்பட்டது. | பழுது பார்ப்பதற்கு அல்லது வாகனத்தை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவ்வாறு பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படும் வாகனங்கள் 2020 பொருள் கணிப்பீட்டின் போது தகுந்த வழிமுறையை கையாள நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | ரூபா. 26,810,000 பெறுமதியுள்ள கட்டிட நிர்மாணங்கள் மற்றும் உபகரணங்கள் செயலற்ற நிலையில் காணப்பட்டது. | சபைக்கு சொந்தமான சொத்துக்கள் பயனுள்ள செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |